உ

சிவமயம்

ஸ்ரீ கோமுக்தீஸ்வரசுவாமி கோயில்

வரலாறு

திருவாவடுதுறை

முக்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

1972

N72
109988

உ

சிவமயம்

ஸ்ரீ கோமுக்தீஸ்வரசுவாமி கோயில்

வரலாறு

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி வெளியிடப்பெற்றது

கும்பாபிஷேக வெளியீடு

திருவாவடுதுறை

ஸ்ரீ கோமுக்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம்

1972

Q23:B8.21193.K
N72

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
109988
EGMORE, MADRAS-8

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முகவுரை

திருவாவடுதுறை என்பது தேவார ஆசிரியர் மூவர் தேவாரமும் பெற்று விளங்கும் சிவதலம். இத்தலம் சென்னையிலிருந்து சிதம்பரம் மாயூரம் வழியாகத் தஞ்சாவூர் திருச்சி செல்லும் வழியிலே மாயூரம் - கும்பகோணம் இருப்புப்பாதையில் உள்ள நரசிங்கன்பேட்டை புகைவண்டி நிலையத்துக்குக் கிழக்கில் 1 கல் தொலைவில் உள்ளது. மாயூரம் தஞ்சை நெடுஞ்சாலையில் பஸ் மூலமாகச் சென்றால் மாயூரத்திலிருந்து திருவாவடுதுறை 10 கல் தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து 12 கல் தொலைவிலும் உள்ளது. அடிக்கடி பஸ் வசதியுண்டு.

திருவாவடுதுறைக்குச் சிதம்பரத்திலிருந்து செல்வோர் சிதம்பரம், சீர்காழி, வைத்தீசுவரன்கோயில், நீடூர், மாயூரம், (குத்தாலம்) திருத்துருத்தி முதலிய தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு உண்டு. தஞ்சையிலிருந்து துறைசைக்குச் செல்லும் வழியில் பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம், சுவாமிமலை, கும்பகோணம் (குடமூக்கு), திருநாகேச்சுரம், திரிபுவனம், திருவிடைமருதூர், திருக்குரங்காடுதுறை (ஆடுதுறை) முதலிய தலங்களைத் தரிசிக்கலாம். திருவாவடுதுறைக்கு வடக்கில் திருக்கோடிகாவும், தெற்கில் திருக்குளம்பியம் என்னும் தலமும் உள்ளன.

தேவாரத் திருப்பதிகம் பெற்ற தலங்கள் 274; அவற்றுள், வடநாட்டில் 4, துளுவநாட்டில் 1, தொண்டை நாட்டில் 32, நடுநாட்டில் 23, கொங்குநாட்டில் 7, சேரநாட்டில் 1, பாண்டி நாட்டில் 14, சோழநாட்டில் 190, ஈழநாட்டில் 2 உள்ளன. சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 63 தலங்களும் தென் கரையில் 127 தலங்களும் இருக்கின்றன. திருவாவடுதுறை காவிரியின் தென்கரைத் தலங்களுள் ஒன்று. மூவர் தேவாரமும் பெற்றுள்ள தலங்கள் 44. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் அருளிய பதிகங்கள் பெற்றதலம் 52. திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிய தலங்கள் 2. திருநாவுக்கரசு சுவாமிகள் பதிகம் மட்டும் உள்ள தலங்கள் 28. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பதிகம்

மட்டும் உள்ளவை 110 தலங்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடியவை 13. திருஞானசம்பந்தர் பதிகங்கள் மூன்று திருமுறைகளாகவும் (136+122+126=384 பதிகங்கள்); திருநாவுக்கரசர் பதிகங்கள் 4, 5, 6 திருமுறைகளாகவும் (113 + 100 + 99 = 312); சுந்தரமூர்த்தி நாயனுர் பதிகங்கள் (100) 7 ஆம் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

ஒரு தலத்தைத் தரிசிப்போர் அத்தலத்தைப் பற்றிய செய்திகளே அறிந்துகொண்டு தரிசிப்பாராயின் அவர் மனம் மூர்த்தி தலம் தீர்த்த விசேடங்களிற்பற்றிப் பத்திசிரத்தையுடன் தரிசிக்கச் செய்யும். தலவரலாறு கிடையாதாயின் அத்தலத்தில் உள்ள நன்மக்களேக் கண்டு அளவளாவித் தலச் செய்திகளே அறிந்துகொள்ள முயலவேண்டும். அம்மையப்பர் உலகுக்கு அம்மையப்பர் ஆதலின் அப்பெருமானே ஆன்மாக்கள் வழிபட்டு உய்யுமாறு மேலும் மேலும் ஊக்கமும் உறுதிப்பாடும் கொள்ள வேண்டும்.

ஆலயத்தை வலம்வருதல் விசேடம். மதிலின் உட்புறம் வலம் வரல், மதிலின் புறத்தே வலம் வரல், வீதி வலம் வருதல் முதலியன ஒன்றினென்று மிக்க பயனேத்தரும். மூன்று பிரகாரம் உள்ள கோயிலில் வலம் வருங்காலத்துத் தூலதேகம் சூக்குமதேகம் அதிசூக்குமதேகங்களேக் கடந்து சென்று உள்ளே இறைவனேத் தரிசிப்பதாகப் பாவித்தல் வேண்டும். ஐந்துபிரகாரமுள்ள கோயிலாயின் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனேமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசங்களேக் கடந்து உள்ளேசென்று இறைவரைத் தரிசிப்பதாகக் கொள்ளவேண்டும். உடல் அன்னமயகோசம், கர்மேந்திரியமும் பிராணனும் பிராணமயகோசம், கர்மேந்திரியமும் மனமும் மனேமயகோசம், ஞானேந்திரியமும் புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தை ஆனந்தமயகோசம் என அறிந்து நீங்கி தத்துவாதீதராகிய சிவபெருமானேத் தம் உள்ளத்திலே தியானத்துடன் வலம் வருதல் வேண்டும். ஆலயத்தை மூன்று முறை வலம் வருங்காலத்திலே முதல்முறை பாதலலோகத்தில் வலம்வருவதாகவும், இரண்டாம் முறை பூவுலகத்தில் வலம்வருவதாகவும், மூன்றும்முறை விண்ணுலகத்திலே வலம் வருவதாகவும் பாவித்துச் செய்க. இறைவன் அண்டத்தினுள்ளும் புறம்பும் கடந்து அப்பாலுக்கப் பாலாய் உள்ளான் எனக் கருத்திலேகொள்க.

கோயில் தரிசனம் செய்வோர் கோபுரத்தைக் கண்டவுடன் உச்சிமேற் கூப்பிய கையைபுடையவராய்ச் சிவநாமத்தை உச்சரித்துச்செல்க. கோபுரம் தூலலிங்க வடிவம். கோயிற்கதவுகள்

பூட்டப்பட்டிருப்பினும் கோபுரதரிசனமே சிவதரிசன பலனைத் தரும், தீர்த்தத்திலே சென்று முழுகுவோர் அருளில் மூழ்குவ தாகப்பாவிக்க. தீர்த்தத்திலே காறி உமிழ்தல் முதலியன செய் தல் கூடாது. மனந்தூயரராய் முழுகுக. காவிரியில் நீராடிக் கோயிலுக்கு வரும்போது வழியிலே சமாதிகொண்டருளிய குரு மூர்த்தங்களைத் தரிசித்து, வீதிவலம் வந்து, கோமுத்தி தீர்த் தத்திலே நீராடி, அநுட்டானம் முடித்துக் கோபுர வாயிலில் உள்ள துணைவந்த விநாயகரை வணங்கி, உள்ளே சென்று படரரசை வலம் வந்து, பலிபீடத்தின் முன்பு நந்திதேவருக்குப் பின் நமஸ்காரம் செய்து எழவேண்டும். பின்பு உள்ளேபோய் சுவாமி தரிசனம் செய்க.

இத்தலத்திலே வழிபட்டுப் பேறுபெற்றோர் பலர்: உமா தேவியார், தரும நந்தி, முசுகுந்த சக்கரவர்த்தி, செவ்வாய், அகத்தியர், அக்கினி, நவகோடி சித்தர்கள், திருமூலதேவர், போகநாதர், திருமாளிகைத்தேவர், திருவாதவூரர், தேவார முதலிகள் மூவர், சேரமான் பெருமாள் நாயனர், வரகுண பாண்டியன், கோச்செங்கட்சோழர், மிதிலேசன், முனிவர் பலர் முதலியோர்.

முசுகுந்தன் திரவியத் தியாகேசருக்குத் தைத்திருவிழாச் செய்வித்தான். திருவாவடுதுறையைக் காவல் புரியும் சாஸ்தா, துர்க்கை முதலியோருக்குப் பத்துநாள் விழாவும், விநாயகர், முருகக்கடவுள் இவர்கட்குப் பத்துநாள் விழாவும் செய்வித்துத் தைமாதத்திலே இரத சப்தமிக்கு முன்தினம் சந்திரசேகரப் பட்டம் சூடித் தியாகராசர் வீதியிலே உலா வருதற்பொருட்டுக் கொடியேற்றி நான்குநாள் விழாவிலே முறையே கேடயம், பூத வாகனம், கயிலாயவாகனம், விமானம் இவைகளில் உமாதேவி யுடன் வீதியில் எழுந்தருளிக் காட்சி கொடுத்தல். ஐந்தாம்நாள் அரசின் நிழலிலிருக்கும் தருமவிடையில் ஏறிச் சகோபுரத்திலே அம்மையாருடன் எழுந்தருளி வீதியுலா வருதல். தியாகேசர் அசைந்து ஆடி நர்த்தன மண்டபத்திலிருந்து அடியார்கள் வணங்கி மகிழும்படி நடனம்செய்தல். இவ்வாறு அசைந்து ஆடிக்கொண்டே கோயில் வலமாக வந்து, கோபுரத்தின் வழியே உள்வாயிலைக் கடந்து, அரசவனத்தில் உலாவி ஆடி நவநிதி யம்ப லத்திலும் ஆடலைச்செய்தல். பின்பு சிங்காதனத்தில் அம்மை யாரோடு வீற்றிருந்து பூசை முதலிய உபசாரங்கள் கொண் டருளிக் கோயிலினுள்ளே சென்றிருத்தல். பின்பு ஒன்பதாம்நாள் துறைசை வீதியிலே தேர்விழாக் கொண்ட பிறகு கோயிலை அடைந்து மாசிலாமணியீசரிடமாக இருந்து அணைத்தெழுந்த

நாயகராகக் காட்சிதருதல். பத்தாம் நாள் இரதசத்தமி தினத்திலே உத்தராயணத்தில் விடியற்காலை தீர்த்தம் கொடுத்தருளும் நிமித்தம் இடபவாகனத்தில் ஆரோகணித்து எழுந்தருளிவந்து பக்கத்திலே உமாதேவியாரை அணைத்தெழுந்த கோலமாகக் காட்சி தருதல். இறைவர் அம்மையாருடன் தீர்த்தம் கொடுத்து, கோயிலுக்கு எழுந்தருளுதல். மாலையில் அடியார்கள் தரிசிக்கும் பொருட்டுப் பந்தர்க் காட்சியையும் அருளி அம்மையாருடன் திருக்கோயிலுள் சேர்தல் என்பன நடைபெறுவதுண்டு.

அமாவாசை, பிரதோஷம், அட்டமி, உத்தராயணம், தட்சிணாயணம், செவ்வாய்க்கிழமை, சோமவாரம், சுக்கிரவாரம், ஞாயிற்றுக்கிழமை என்னும் இந்த நாட்களில் கோமுத்தி தீர்த்தத்திலே நீராடினோர் இட்ட சித்திகளையெல்லாம் பெற்று மகிழ்வார்.

தேவர்கள் சித்திரைவிழாச்செய்தல்: சித்திரை மாதத்துச் சுக்கில பட்சத்திலே சித்திரா பௌர்ணமிக்கு முன்பு சாத்தற்கு ஐந்துநாளும், வீரமாகாளிக்கு ஐந்துநாளும், விநாயகக்கடவுளுக்கு ஐந்து நாளும், முருகக்கடவுளுக்கு ஐந்து நாட்களுமாக விழாநடத்திப் பின்பு, பத்துநாளும் மாசிலாமணியீசருக்கும் ஒப்பிலாமுலை அம்மையாருக்கும் விழா நடத்தத்தொடங்கி, இடபக்கொடியேற்றித் துவசாரோகணம் செய்வித்தனர். முதல்நாள் விழாவில் பொன்கேடகம், இரண்டாம் நாளில் பூதவாகனம், மூன்றாம் நாள் அன்னவாகனம், நான்காம் நாள் கயிலாயவாகனம் சிங்கவாகனங்கள், ஐந்தாம்நாள் இடபவாகனம் ஆகிய வாகனங்களில் அம்மையாருடன் மாசிலாமணியீசர் திருவுலாக் கொண்டருளி யாவரும் தரிசிக்கச் செய்தனர். ஆறும்நாளிலே கற்பகநீழலில் எழுந்தருளிக் காட்சி தந்தனர். ஏழாம்நாளிலே அம்மையார் மஞ்சள்நீர் குளித்தல். சத்தமி கழிந்த பின்பு உத்திரநாளில் இரவிலே ஒப்பிலாமுலையம்மையாருக்குத் திருக்கல்யாணச்சிறப்பு, ஒன்பதாம் நாளில் திருத்தேர் உலாக்காட்சி, பத்தாம்நாள் அம்மையாருடன் திருவிழாக் கொண்டருளித் தீர்த்தம் கொடுத்தல் முதலியன நடைபெற்றன.

சித்திரை மாதம் திருமணவிழாவும், வைகாசி மாதத்தில் வசந்தவிழாவும், ஆனி மாதத்து உத்திர நட்சத்திரத்தில் விடியற்காலத்திலே (அரசம்பலம்) போதியம்பலத்துள் மகாதாண்டவ உற்சவமும் நடைபெற்றுவந்தன என்பர். அதுல்யகுசாம்பிகைக்கு ஆடிப்பூரவிழா பத்துநாட்கள் நடந்தன.

இங்கே கூறப்பட்டன தலபுராணச் செய்திகள். அங்கே இவற்றை விரிவாக அறியலாம்.

கோயில் கட்டப்பெற்ற காலம்: முதற்பராந்தகசோழன் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயிலில் 9 உள்ளன. அவன் திருச்சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தவன்; கி. பி. 907 முதல் 948 வரை சோழமண்டலத்தை ஆட்சிபுரிந்தான். இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு இக்கோயில் கற்றளியாக ஆக்கப் பட்டது.

பராந்தகன் காலத்தில் கருங்கற்கோயிலாகக் கட்டியவர் கற்றளிப்பிச்சன் என்பவர். இவருடைய படிமம் கருப்ப இல்லின் தென்பக்கத்தில் தட்சிணுமூர்த்திக்குக் கீழ்புறத்தில் உள்ளது. பிச்சன் - அன்புடையவன். இக்கோயில் பலரால் உதவப்பட்ட பொருள் கொண்டு கட்டப்பெற்றது என்பவையும் பிறவும் கல் வெட்டுச் செய்திகள்.

இனி, கோகழி என்பது திருவாவடுதுறை. ''பாகுறு மின் சொற்றேவி பசுவுருக் கழித்த வாற்ருல், கோகழி என்று நாமம் கோமுத்தி நகர்க்குக் கூறி' என சாஸ்திரம் - ஸ்ரீ சாமிநாத முனிவர் அப்பெயர்க்குக் காரணமும் புராணத்தில் கூறினர்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம் சிவபுராணத்தில் 'கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க' என்றும் 'குயிற்பத்தில்' 'கொம்பில் தங்கு கூக்குயிலே இங்ஙன் மருவு கோகழியுள்ளானை வருக நீ கூவாய்' என்றும்; 'பண்டாய' என்னும்வெண்பாவில், 'என்றனையும் ஆளாக்கொண் டாளுகின்ற, மிக்க கோகழியெம் கோமாற்கு' என்றும் வருமிடங்கள் எல்லாம் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானையே புராண ஆசிரியர் குறிப்பிடுகின்ருர்.

மாணிக்கவாசகர் பல இடங்களிலும் இறைவன்பால் அருளும் உபதேசமும் பெற்ருர். முதலில் 'நமச்சிவாய' எனத்தூல பஞ் சாக்கரத்தை உத்தரகோசமங்கையில் பெற்ருர். பின்னர், 'சிவாயநம' என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தைக் கோகழியின் கண் உபதேசிக்கப்பெற்ருர். உத்தரகோசமங்கையில் அருள் புரிந்த குருமணி மாணிக்கவாசகரை 'இங்குத்தானே நிற்றி' எனப் பணித்து அங்கே நிறுத்தி, அவ்விடத்தினின்றும் திருப்பெருந் துறைக்குப் பிரிந்துசென்ருர். அவ்விடத்தே அடியாரோடும் தேனுந்து செந்தீயில் கரந்துசென்றனர். அதனையறிந்த திருவாத வூரடிகள் புலம்பி நைந்திருந்தார். அவருக்கு ஆவடுதுறையாகிய கோகழிக்கண் கலக்கம்தீர உபதேசித்தருளினர் இறைவர். மணி வாசகரும் தம் வாழ்க்கையில்கோகழிநாதன், திருப்பெருந்துறை யான், தில்லையம்பலவன்பால் பெரிதும் ஈடுபாடுடையராயினர்.

ஆதலால் சிவபுராணமாகிய பாயிரத்தில் அம்மூன்று தலத்தினும் வீற்றிருந்த குருமணியையே அடிகள் குறித்தனர் என்க.

கோகழி என்றது திருவாவடுதுறையை. திருவாவடுதுறை என்றே எல்லாரும் உரைத்தனர். மற்று அதனை மணிவாசகர் கோகழி எனக் குறித்தனரேயன்றித் திருவாவடுதுறை எனக் கூறிற்றிலர். திருவாவடுதுறைக்குக் கோகழி, கோமுத்தி எனவும் பெயர்கள் உள்ளன. இதனை அத்தலவரலாறுகள் வல்லார் வாய்க் கேட்டுணர்க. இனி, கோகழி என்றது திருப்பெருந் துறையை எனச் சாதிப்பர் ஒரு சாரார். குயிற்பத்து இரண்டா வது திருப்பாடற்கண் உத்தரகோசமங்கையும், ஆறுவது திருப் பாடற்கண் கோகழியும், ஏழாவது திருப்பாடற்கண் பெருந் துறையும் கூறப்படுகின்றன. ஆறும் பாடற்கண் கூறப்படுகின்ற கோகழி என்றது பெருந்துறையாகுமாயின், மூன்றும் பாடலில் கூறப்படுகின்ற உத்தரகோசமங்கையும் பெருந்துறையேயாகும். உத்தரகோசமங்கையும் பெருந்துறையும் ஒன்று எனப்படா, வேறு எனவேபடும், இது வெளிப்படையாதல்போலக் கோகழி யும் பெருந்துறையும் ஒன்றெனப்படா, வேறெனவேபடும். அங்ஙனமாகவும், கோகழி என்றதற்கு நலிந்து பொருள்கூறி, அது பெருந்துறையேயாகும் என நாட்ட முற்படுதல் வலியற்ற செயலாம்.

இனி, ''நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல, எண்ணியெழு கோகழிக் கரசை'' (பண்டாய 5) என்றவிடத்தும் அவ்விரு தலங்களும் வேறுதல் கண்கூடு. கோகழிக்கரசு என்றது அங்குள்ள சிவபோதி விருட்சத்தை.

''சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலின்'' என்பது திருமந் திரம் 89. அரசின் அடி அயனாகவும், நடு அரியாகவும், முடி அர னாகவும் கொண்டு, ஏத்தி வணங்கி வலம் வருதல் வழக்கம். இதனாலும் அதுசிவமாதல் தெளிக. கோகழி (திருவாவடுதுறை)க் குத் தலவிருட்சம் படரரசு. இவைகளால் கோகழி என்பது திருவாவடுதுறையாதல் நன்கு தெளிக.

இதுகாறும் கூறியவாற்றால் மாணிக்கவாசகர் முதலில் உப தேசம் பெற்றதலம் திருவுத்தரகோசமங்கை என்பதும், பலதலங் களையும் தரிசித்து வருகையில் திருவாவடுதுறையில் இரண்டாம் முறை உபதேசிக்கப்பெற்றனர் என்பதும், அங்குள்ள மாசிலா மணியீசுரரையே ஈண்டுக் குருமணி என்றனர் என்பதும் வெளிப் படையாகவும் குறிப்பாகவும் கொள்ளக்கிடந்தமை காண்க. திருவுத்தரகோசமங்கையிலே உபதேசம் பெற்றதனை 'நமச்சிவாய வாஅழ்க' என்றும், திருவாவடுதுறையில் உபதேசம் பெற்றதனைக்

குறிப்பாக, ''குருமணிதன் தாள் வாழ்க.'' என்றும் கூறினர் எனக்கொள்க. ''சிவாய நம எனப் பெற்றேன்'' (திருவேசறவு - 19) என்னும் இதனாலும் இருவகையான திருவைந்தெழுத்துக்கள் அடிகட்கு உபதேசிக்கப்பட்டன.

'' நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசை ''

என்னும் பாடற்பகுதியில் பெருந்துறைக்கண் தாம் எய்திய பேரிடர் அனைத்தும் கோகழிக்கண் ஒழியப் பெற்றமையின் 'நம் மிடர்கள் போயகல எண்ணி எழுகோ கழிக்கரசை' என்ற நயம் காண்க.

இவ்வாதீனத்திலே 16 வது குருமகா சந்நிதானமாக வீற்றிருந்த மேலகரம் - ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகளுக்குப் பின்பு பதினேழாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து திருமுறை ஆராய்ச்சியே பொழுதுபோக்காகக்கொண்டு வித்தியா விநோதராக விளங்கிய ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் கைக்குறிப்பிலே கண்ட கோகழி விளக்கத்தையே இங்கே விரித்தெழுதினேன். சாஸ்திரம் - ஸ்ரீ சாமிநாதமுனிவர் புராணத்திலே அமைத்துள்ள கருத்தையே தழுவி எழுந்தது ஸ்ரீ மகா சந்நிதானத்தின் குறிப்பு என அறிக.

தல வரலாறாகிய செய்திகள் பலவும் பொருளடக்கத்தில் குறித்துள்ளேன்.

இவ்வாதீனத்து இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளிய வண்ணம் இம்மட்டில் குருவருளாலும் திருவருளாலும் இவ் வரலாறு நிறைவெய்தியது. குற்றம் பொறுத்தருள்க.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி —

த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

ஆதீன வித்துவான்.

திருவாவடுதுறை
9—8—72.

உ

சிவமயம்

தோத்திரம்

மாசிலாமணியீசர்

ஆசிலாத் தென்துறைசை யரசடியின்
முளைத்தெழுந்த வமுதை ஞானத்
தேசுலா வுங்கருணைச் சிவக்கொழுந்தைப்
பரபோகத் திரளை யார்க்கும்
பேசொணுச் சுகந்தருமுக் கட்கனியை
யன்பரின்பப் பெருக்கிற் றேன்றும்
மாசிலா மணியிணைக்கண் மணிகுளிரக்
கண்டுதினம் வணங்கி வாழ்வாம்.



ஸ்ரீ மாசிலாமணிப்பெருமான்

உ

சிவமயம்

திருவாவடுதுறை

ஸ்ரீ கோமுக்தீஸ்வரசுவாமி கோயில் – தல வரலாறு

தலவிநாயகர் இருவர் :

(1) துணைவந்த விநாயகர்: இவர் அம்பிகை பசு வடிவங் கொண்டு வந்தபொழுது துணையாகவந்தவர்; திருக்கோயிற் கோபுரவாயிற்குத் தென்பால் கோயில் கொண்டவர். (2) அழகிய விநாயகர்: இவர் அகத்திய முனிவருக்குப் பஞ்சாக்கர உபதேசம் செய்தவர்; தட்சிணாமூர்த்தியின் கீழ்பால் உள்ளவர்.

சுவாமியின் திருநாமங்கள் :

ஸ்ரீ ஸ்வயம்வியக்தேசுவரர், பிரகாசமணிநாதர், மாசிலாமணியீசர், கோமுத்தீசர், கோகழிநாதர், அணைத்தெழுந்தநாயகர், பூகைலாசேசுவரர், புத்திரத்தியாகர், போதிவனநாதர், போதியம்பலவாணர், மகாதாண்டவேசுவரர், அர்த்தத்தியாகர், முத்தித்தியாகர், சிவலோகநாயகர் என்பன.

தேவியார் திருநாமங்கள் :

அதுலகுசநாயகி, ஒப்பிலாமுலையம்மை, ஒப்பிலாள் என்பன.

தலத்தின் திருநாமங்கள் :

கோமுத்தி, கோகழி, திருவாவடுதுறை, பூகைலாசம், நந்திநகர், தியாகபுரம், போதிவனம், அரசவனம், மகாதாண்டவபுரம், வேதபுரம், சித்தபுரம், நவகோடி சித்தபுரம், முத்தி க்ஷேத்திரம், சிவபுரம் என்பன.

தீர்த்தங்கள் மூன்று :

1. முத்தி தீர்த்தம் அல்லது கோமுத்தி தீர்த்தம்; இது திருக்கோயிலின் எதிரில் உள்ளது. 2. கைவல்லிய தீர்த்தம்; இது திருக்காவிரியில் உள்ளது. 3. பத்மதீர்த்தம்: இது ஸ்ரீ கொங்கணேசுரர் கோயிலின் பக்கத்தில் உள்ளது.

தலவிருட்சம் :

திருவரசுகள்: படர்ந்து விளங்குதலால் இவை படர்ந்த அரசுகள் என்றும், நிலவரசுகள் என்றும் வழங்கப்படும்.

சபை :

போதியம்பலம் அல்லது அரசம்பலம்.

நந்தி :

தருமநந்திதேவர்.

சிவபெருமான் நிகழ்த்தியருளிய விசேடங்கள் :

1. திருவிளையாட்டாக நேர்ந்த பசுவடிவத்தை உமா தேவியாருக்கு நீக்கி அணைத்தெழுந்துநின்று இந்தத் தலத்தைக் கைலையங்கிரியாகக் காட்டினர்.

2. தமது கட்டளைப்படி தேவர்கள் படர்ந்த அரச விருட்சங்களாகத் தோன்றி விளங்க, அவற்றின் நிழலில் எழுந்தருளியிருந்தனர்.

3. மகப்பேறு கருதிவந்த முசுகுந்த சக்கரவர்த்திக்கு இந்தத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் காட்டிப் புத்திரப்பேறும் அளித்தனர்.

4. தம்மைப் போற்றிய தருமதேவதையை இடபவாகனமாகக் கொண்டதன்றிச் சந்நிதியில் அரசவிருட்சத்தின் நிழலில் கோயில்கொண்டிருக்கும்படி வரமளித்தனர்.

5. தேவர்களும் முனிவர்களும் செய்த பிரார்த்தனைக்கு இரங்கி அரசவிருட்சத்தின் நிழலில் அமைந்த அம்பலத்தில் மகாதாண்டவம் புரிந்தனர்.

6. திருமூலநாயனாரைத் தடுத்தாட்கொண்டு ஆகமசாரமாகிய திருமந்திரத்தை வெளிப்படுத்தத் திருவருள் புரிந்தனர்.

7. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்குப் பொற்கிழி அளித்தனர்.

8. சில முனிவர்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அருளினர்,

9. சில அந்தணர்களுக்கு வேதத்தை ஓதியருளினர்.

10. போகர் முதலிய சித்தர்களுக்கும், நவகோடி சித்தர்களுக்கும் அவர்கள் விரும்பியவண்ணம் அட்டமாசித்திகளையும் பிறவற்றையும் அருளினர்.

இந்த விசேடங்களால் சுவாமியின் திருநாமங்களில் பெரும் பாலன காரணப்பெயர்களாக உள்ளமை காண்க.

அன்றியும் இத்தலத்தில் கோச்செங்கட்சோழ நாயனார் திருப்பணிசெய்து பேறு பெற்றார் என்றும், சித்தர்கள்பலர் எப்பொழுதும் தங்கியிருக்கின்றார்கள் என்றும் புராணம் கூறுகிறது.

ஸ்ரீ அணைத்தெழுந்தநாயகர் :

இவர், உமாதேவியாரை அணைத்தெழுந்த கோலமாக எழுந்தருளியிருப்பவர். உத்ஸவாந்தத்தில் கோமுத்தி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருள்பவர் இவரே,

ஸ்ரீ தியாகராசர் :

முசுகுந்தருக்குச் சிவபெருமான் திருவாரூர்த் தியாகராஜராகக் காட்சி கொடுத்தது தொடங்கி இவர் சந்நிதி இங்கே உளதாயிற்று. இவர் வீரசிங்காதனமுடையார். இவருடைய நடனம் சுந்தரநடனம். உற்சவத்தில் திருத்தேர் ஊர்ந்தருள்பவர் இவரே. இவரது பந்தர்க்காட்சிமிகஅற்புதமானது. திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜருக்குள்ள சிறப்புக்கள் இங்கும் உள்ளன.

மகப்பேறு கருதினோர் படரரசை வலம் வருதலும், அவற்றின் அடியில் வரங்கிடத்தலும், சூளுறுவோர் அவற்றை நோக்கிச் சூளுறுதலும் இத்தலத்தில் நிகழ்வனவாம்.

நரசிங்கன் என்னும் கொடிய அரசன் ஒருவனை வெல்லும் படி, ஸ்ரீ கோமுத்தீசர் திருக்கோயில் மதிலின்மேல் இருந்த இடபங்களைத் திருமாளிகைத்தேவர் ஒருருவாக்கி அனுப்பினர். ஆகலின் கோயில் மதில்களில் இடபங்கள் இலவாயின என்பர்.

இத்தலத்துக்கு உரியனவாகத் தேவாரத் திருப்பதிகங்கள் (சம்பந்தர் 1, நாவுக்கரசர் 5, சுந்தரர் 2) எட்டும், சேந்தனூர் அருளிச்செய்த திருவிசைப்பாப் பதிகம் ஒன்றும் உள்ளன. அன்றியும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ வேலப்ப தேசிக மூர்த்திகளுடைய சிஷ்யராகிய ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவர் என்பவரால் இயற்றப்பெற்ற 2600 பாடல்கள் உள்ள திருவாவடுதுறைப்புராணம் ஒன்றும், திராவிட மாபாடியகார ராகிய ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகளுடைய மாணவர்களுள் ஒருவராகிய தொட்டிக்கலை - ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருவாவடுதுறைக்கோவையும், மஹாவித்துவான் திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய துறைசை யமகவந்தாதியும், இராயசம் ஸ்ரீ பொன்னுசாமி செட்டியார் இயற்றிய துறைசைச் சிலேடை வெண்பாவும் உள்ளன.

வளநாடு :

திருவாவடுதுறையைத் தன்னகத்துக்கொண்ட வளநாடு உய்யக்கொண்டார் வளநாடாகும். இந்நாடு காவிரிக்கும் அரிசி லாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்புடையது. இது ஆக்கூர் நாடு, அம்பர்நாடு, குறும்பூர்நாடு, மருகல்நாடு, பாம்பூர்நாடு, தென்கரைத்திரைமூர்நாடு, திருநறையூர்நாடு, திருவழுந்தூர் நாடு, வெண்ணாடு, விளநாடு, பேராவூர்நாடு என்னும் பிரிவுகளை உடையதாய் இருந்தது.

திருவாவடுதுறை, உய்யக்கொண்டார் வளநாட்டின் பிரிவுகளில் ஒன்றாகிய தென்கரைத்திரைமூர் நாட்டிற்கு உட்பட்டதாகும். நெற்குப்பை, சாத்தனூர், நடார், நல்லுச்சேரி, திருக்குரங்காடுதுறை, மகேந்திரமங்கலம் என்னும் ஊர்கள் இந்நாட்டிற்கு உட்பட்ட சில ஊர்கள் எனக் கல்வெட்டு அறிவிக்கும்.

ஸ்ரீ துணைவந்தவிநாயகர்.



ஸ்ரீ அழகிய விநாயகர்

திருவிழா :

இத்திருக்கோயிலில் புரட்டாசி மாதத்தில் ஏழுநாட்களில் திருவிழா நடைபெற்று வந்தது. அக்காலம் மூலநட்சத்திரத் தன்று கொடியேறிப் பூரட்டாதி நட்சத்திரத்தன்று தீர்த்தமாடு வது வழக்கம்.

இவ்விழா முடிவு நாளாகிய புரட்டாசிப் பூரட்டாதிநாளில் திருமூலநாயனரது நாடகமும், ஆரியக்கூத்து ஏழு அங்கமும் நடத்தப்பெற்றுவந்தன என்று தெரிகிறது.

தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர், மிழலை ஐந்நூற்றுவர், திருப்பெருந்துறை முந்நூற்றுவர் என்பவர்களைப் போன்று 'சாந்தை மெய்ப்புகழாளர் ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்வோர் உள்ளனர்' என்று சேந்தனர் திருவிசைப்பாவால் அறிகிறோம். சாந்தை என்பது இத்தலத்துக்கு அணிமையில் உள்ள சாத்தனூர். தில்லைவாழந்தணரும், திருப்பெருந்துறை முந்நூற்றுவரும் சிவபெருமானைத் தம்முள் ஒருவராகப்பெற்று இறைவரைப் பூசிக்கும் பெருமை வாய்ந்தவர்கள் என்பது இங்கே அறியத்தக்கது.

உற்சவம் :

சாகலியம், பாவனம், சாந்தம், மாங்கலியம் என நான்கு வகைப்படும் என்பர். அவற்றுள், சாகலியம் என்பது துவசம் உயர்த்துதல் முதல் தீர்த்தம் கொடுத்தல்வரை இயற்றிடுதல். பாவனமாவது துவசம் ஏற்றுமல் தீர்த்தம் கொடுத்தல்வரை இயற்றிடுதல். சாந்தமாவது துவசாரோகணமும் காலைவிழாவும் இல்லாமல் மாலைவிழாமட்டும் நடத்துதலாம். மாங்கலியமாவது காலைவிழா மட்டும் நடத்துதல். இனி, முன்சொல்லப்பட்ட சாகலியம் ஒன்பது வகைப்படும். சவுரம்,சாந்திரம், சாவித்திரம், கவுமாரம், தைவீகம், பவுநம், பவுதிகம், கணம், சைவம் என்பன அவை.

சவுரம் இருபத்தேழு நாட்களும், சாந்திரம் பதினேழு நாட்களும், சாவித்திரம் பதினைந்து நாட்களும், கவுமாரம் பதின்மூன்று நாட்களும், தைவீகம் ஒன்பது நாட்களும், பவுநம் ஏழுநாட்களும், பவுதிகம் ஐந்து நாட்களும், கணம் மூன்றுநாட்களும்,சைவம் ஒருநாளும் நடத்தும் விழாக்களாம்.

கொடியேற்றிப் பலியிட்டு நடத்துவது ஒன்று. இரண்டு மின்றி நடத்துவது ஒன்று. கொடிமரம் பதியாகவும் துவசம் பசுவாகவும் கயிறுபாசமாகவும்கொண்டு நடத்தல் திரிபதார்த்த மாம். துவசாரோகணத்தோடு செய்யும் உற்சவமே உத்தமம் ஆகும். ஆகலின் கொடியேற்றுேடு பலியிட்டுச் செய்யும் தைவீக உற்சவமே சிறப்புடையதாம் என்க. தைவீக உற்சவம் ஒன்பது நாட்கள் என்றுராயினும், பத்து பதினெரு நாட்களும் ஆம் என்பர் பெரியோர்.

இடம்: கும்பகோணத்திலிருந்து மாயூரம் பெருவழியில் 12 கல் தொலைவிலும், மாயூரத்திலிருந்து கும்பகோணம் வரும் பெருவழியில் 10 கல் தொலைவிலும் உள்ளது. மாயூரம்-தஞ்சாவூர் இருப்புப்பாதையில் நரசிங்கன்பேட்டை புகை வண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 1-கல் தொலைவு. ரெயில் வசதி, பஸ் வசதிகள் உண்டு.

மகாகும்பாபிஷேகம்

கும்பாபிஷேகப் பெருவிழா 'பெருஞ்சாந்தி' என்று சொல்லப்படும். ஆலயங்களில் கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறையாவது அவசியம் செய்தல்வேண்டும். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் திருமயிலாப்பூர் தேவாரத்திலே பூம்பாவையை எழுப்பிய திருப்பதிகம் பத்தாவது திருப்பாட்டில் "கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான், பெருஞ்சாந்தி காணுதே போதியோ பூம்பாவாய்" என்று அருளிச்செய்தமையும் காண்க. கும்பாபிஷேகம் என்பது கும்பத்திலுள்ள நீரினுல் அபிடேகித்தலாம்.

கும்பத்தைச் சிவசொரூபமாகப் பாவித்தல்வேண்டும். கும்பவஸ்திரம் தோல்; மேலே பூசிய செம்மண் இரத்தம்; கும்பத்து மண் மாமிசம்; தண்ணீர் மேதை; கூர்ச்சம் எலும்பு; மேலேசுற்றிய நூல் நரம்பு; கும்பத்தில் இடும் பொன், பூ முதலியன வீரியம்; நியசிக்கப்பட்ட மந்திரம் உயிர்; கீழே பரப்பியுள்ள நெல் முதலிய தானியங்கள் ஆசனம் எனக்கொள்க. கோயிலில் உள்ள மூர்த்தியின் சமீபத்தில் கும்பத்தை முதலில் வைத்து தருப்பை மாவிலை முதலியவற்றைக்கொண்டு மந்திரங்களைச் சொல்லிப் பிம்பத்தில் உள்ள மூர்த்தியைக் கும்பத்தில் ஆவா

கனம் செய்வார்கள். ஆவாகனமாவது மந்திரங்களைச்சொல்லிக் கும்பத்தில் ஆகர்ஷணம்செய்து அபிமுகமாகச் செய்தலாம். பின்பு அந்தக் கும்பத்தை மங்கள வாத்திய முழக்கத்துடன் யாகசாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

யாகசாலை தத்துவ சொரூபமானது. தத்துவங்கள் - 36. சிவபெருமானது அஷ்டமூர்த்த சொரூபம் என்றுமாம். யாக சாலையில் ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப் பெறும். சாதாரணமாக நாடோறும் ஆகவனீயம் தட்சிணாக் கினியம் காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினி வளர்க்கப் படும். அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்தசந்திர வடிவம் முதலாக ஒன்பது வடிவில் காணப்படும். அவ்வாறு வடிவங்கள் அமைத்தற்கும் காரணங்கள் உண்டு. குண்டங் களைச்சுற்றி முறுக்கிய பசிய தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் இட்டு சுத்தமான அரணி யிலிருந்து எடுத்த அக்கினியால் அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அம்மந்திரங்களுக்குரிய அதிதெய்வங்களை மனத்தில் தியானித்து சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக்கொண்டு நெய், பொரி முதலியவைகளைச் சொரிந்து அக்கினி வளர்ப் பார்கள். இவ்வாறு மந்திரம், கிரியை, பாவனை என்னும் மூன்றுனும் வளர்க்கப்பெறும் அக்கினியிலிருந்து எழும் புகை யும், வேதஒலி சிவாகம ஒலிகளும், தேவாரம் முதலிய அருட் பாக்களின் ஒலிகளும், நல்ல வாத்திய கோஷங்களும், மெய் யன்பர்கள் தூய எண்ணங்களும் எங்கும் நிறைந்து பரிபூரண மாகவுள்ள சிவபெருமானது அருட்சத்தியை எழுப்பிக் கும்பத் தில் பிரகாசிக்கச் செய்யும். எல்லா மக்களுடைய உள்ளங் களும் ஒரேகாலத்தில் ஓரிடத்திலேயே பதியும் ஆகலின் அக் கும்பம் தெய்வீகக்கலை நிறைந்துள்ளதாம். புதியதொரு சக்தி யும் அங்கே வெளிப்படும். மின்சாரத்தைச் செலுத்தச் செப்புக் கம்பிகளே தகுதியுடையன எனக் கண்டார்கள் விஞ்ஞானிகள்.

மெய்ஞ்ஞானிகளாகிய நமது பெரியோர்கள் தருப்பை நுனி, மாவிலை முதலியனவும் மந்திரங்களுடன் கூடியவிடத்து சிவசத்தியாகிய மின்சாரத்தைச் செலுத்தக்கூடியன என்று கண்டறிந்து அவற்றைக் கைக்கொண்டார்கள் என்பதை நுணுகிக் கண்டறிக. மனம் வாக்குக் காயங்கள் ஒருப்படுதலை ‘மனமது நினைய வாக்கு மந்திரங்கள் சொல்ல இனமலர் கையிற் கொண்டருச்சித்தல்’களால் நன்கறிக.

யாகசாலையில் நடைபெறவேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்றவுடன், மீண்டும் தெய்வீகசக்தியானது ஆலயத்திலுள்ள பிம்பத்தில் அமைய வேண்டியதற்காக, அந்தச் சத்தியைச் செலுத்தும் சக்திவாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழியே அச் சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்திலுள்ள நீரினால் சிகரங்களினும் பிம்பத்தினும் அபிடேகம்செய்வார்கள். இதுவே கும்பாபிடேகமாம். குண்டத்திலுள்ள அக்கினி சிவசொரூபம், கும்பம் சிவசொரூபம், பிம்பம் சிவசொரூபம் என உறுதியாகப் பாவிக்கவேண்டும். நம்முடைய பாவனைகளே பயன்தரும்.

மாவிலை, தேங்காய், தருப்பைமுடிச்சு, ஆடை, சந்தனம், அக்ஷதை, மலர் என்னும் இவற்றால் கும்பத்தை நன்றாக அலங் காரம் செய்தல் வேண்டும்.

தைலக்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பழச் சாறு, இளநீர், சுகந்ததாரை, ஸ்நபனம், சங்கதீர்த்தம் என்னும் இவற்றால் அபிஷேகம் செய்தல்வேண்டும். குசோதகம், வில் வோதகம், சுத்தோதகம், சகஸ்திரதாரை, நவகலசஸ்நபனோ தகம் இவற்றாலும் அபிஷேகிக்க.

சுத்தான்னம், சர்க்கரை அன்னம், எள்ளன்னம், பயறன் னம், பாயசான்னம் முதலிய நிவேதனங்கள்.

மாக்காப்பு என்பது அரிசிமா, உழுந்துமா, பயறுமா, கடலைமா, கோதுமைமா என்பனவாம். பஞ்சாமிருதம்: தேன், சர்க்கரை, கற்கண்டு, திராக்ஷை வாழைப்பழம் என்பன. பழச் சாறு: எலுமிச்சை, நாரத்தை, கொளிஞ்சி, விளா, வில்வம், மாதுளை, தமரத்தை என்பன. குசோதகம் - தருப்பை ஜலம். வில்வோதகம் - வில்வபத்திரம் போட்ட ஜலம். நாவற்பழச் சாற்றாலும் அபிஷேகம் செய்யலாம்.

அஷ்டபந்தனம் :

'அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. அஷ்டபந்தனமாவது எட்டுப்பொருள் களைக்கொண்டு இடிக்கப்பட்ட மருந்தைப் பீடத்தைச்சுற்றி அசையாமல் பதியவைத்தலாம். ஆலயத்தில் உள்ள மூர்த்திகள் அசைந்தாலும், மேல் நோக்கினாலும், கீழ்நோக்கினாலும்

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுத்தீசுவரர் கோயில் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் பல லட்ச ரூபாய் செலவில் இப்பொழுது பரிதாபி ஆண்டு ஆவணித் திங்கள் 11-ஆம் நாள் (27—8—72) நடைபெறுகிறது.

ஆவுடையார்கோவில் ஸ்ரீ ஆத்மநாதசுவாமி கோயில் திருப்பணி செய்விக்கப்பெற்று வருகிறது. விரைவிலே மகா கும்பாபிஷேகமும் நிறைவேறும்.

கோயில் வழிபாட்டுமுறை

1. முழுகிக் குளித்துத் தோய்த்து உலர்ந்த ஆடையைத் தரித்துச் சந்தியாவந்தனம் (அநுட்டானம்) முடித்துக்கொண்டு தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை கர்ப்பூரம் முதலியவற்றை வைக்கப்பட்டபாத்திரத்தை எடுத்துக்கொண்டு நடந்துபோதல் வேண்டும்.

2. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடன் கால்களைக் கழுவி ஆசமனம்செய்து, தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையும் தலையிலே குவித்து, சிவநாமங்களைச் சொல்லிக்கொண்டு உள்ளேபோதல் வேண்டும்.

3. திருக்கோயிலினுள்ளே போனவுடன் பலிபீடத்தையும் கொடிமரத்தையும் கும்பிட்டு, பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் மூன்று ஐந்து தரங்கள் செய்தல் வேண்டும். ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், மகளிர் பஞ்சாங்க நமஸ்காரமும் பண்ணுதல் வேண்டும்.

அட்டாங்க நமஸ்காரமாவது: தலை, கையிரண்டு, மோவாய் தோள்கள் இரண்டு, செவியிரண்டு ஆக எட்டுறுப்பும் பூமியில் பட வணங்குதல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது: தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்துறுப்புக்களும் பூமியில்பட வணங்குதல்.

4. நமஸ்காரம் செய்தவுடன் எழுந்து, இரண்டு கைகளையும் குவித்து, பஞ்சாக்கரத்தை உச்சரித்துக்கொண்டு கால்களை மெல்ல வைத்து மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் வலம்

வந்து மறுபடியும் சந்நிதானத்தில் நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

5. சுவாமி சந்நிதியில் துவாரபாலரை வணங்கி, பின்பு திருநந்தி தேவரை வணங்கித் துதித்து, உள்ளே சென்று சிவ பெருமானைத் தரிசிக்கவேண்டும் என்று பிரார்த்தித்து உள்ளே செல்க. முன் விநாயகரை தரிசித்துப் பின், சிவலிங்கப்பெருமான் சந்நிதியையும், உமாதேவியார் சந்நிதியையும் தரிசித்தல் வேண்டும்.

அதன்பின் நடராசர், தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசித்தல் வேண்டும். அதன்பின் சமயகுரவர் நால்வரையும் தரிசித்தல் வேண்டும்.

6. சுவாமி சந்நிதி, அம்பிகை சந்நிதி முதலிய எந்த சந்நிதி களாயிருந்தாலும் ஒருபுறமாக ஒதுங்கி நின்று, ஏனை அடியார் களுக்கு சந்நிதியை மறைக்காமல் இருந்து தரிசனம்பண்ணல் வேண்டும்.

எந்தத் தகுதியுடையராயினும் அதாவது கல்வி, செல்வம், அதிகாரம், செல்வாக்கு முதலியவற்றால் எவ்வளவு உயர்ந்த வர்களானாலும் சந்நிதியில் செருக்கு முதலியன இன்றி ஒதுங்கி நின்று தரிசனம்செய்தல் அவசியம். 'எல்லார்க்கும் பணிதல் நன்றாம்' என்னும் திருக்குறளைச் சிந்திக்க.

7. கோயிலுக்குச் செல்வோர் வெறுங்கையோடு செல் லாமல் ஏதேனும் ஒரு நிவேதனப் பொருளைக்கொண்டு சென்று நிவேதனம் செய்விக்க. அல்லது வில்வம், மலர் முதலியன கொண்டுபோய்ச் சாத்தச்செய்க. தீபத்தின் பொருட்டு எண் ணெய் கொண்டுபோய்த் திருவிளக்கேற்றுக. இயன்ற அளவிலே செய்க. இறைவர் தம்பால் மனம் ஒன்றியிருப்பதையே அவர் விரும்புகிறார்.

8. நந்தி பலிபீடங்களுக்கு இப்பால்தான் நமஸ்காரம் பண்ணவேண்டும். நந்திதேவருக்கும் சிவலிங்க மூர்த்திக்கும் இடையே நமஸ்காரம் பண்ணலாகாது.

9. கோயிலினுள்ளே சட்டை போட்டுக்கொண்டும், அங்கவஸ்திரம் போட்டுக்கொண்டும் போதல் கூடாது.

10. சிவபெருமானை மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் வலம் வந்து தரிசித்தல் வேண்டும். உமாதேவியாரை நான்கு முறை வலம் வந்து தரிசித்தல் வேண்டும்.

11. தரிசனம் செய்து முடிந்தபின் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து மூன்றுமுறை கையால் மெல்லத்தட்டிச் சிவதரிசன பலத்தைக் கொடுக்கும்படி பிரார்த்திக்கவேண்டும்.

உரத்த சத்தத்துடன் கையைத் தட்டலாகாது. துணியைக் கிழித்து அல்லது துணியின் நூலை எடுத்து அங்கே போடுதல் கூடாது. சிவசந்நிதியின் பக்கத்தில் இருப்பவர் தொனிச் சண்டர். தந்தையின் காலைச் சிவாபராதத்தின் பொருட்டுத் துணித்தமையின் அவர் துணிச்சண்டர் எனப்படுவர். அம்பிகையின் பக்கத்தில் இருப்பவர் சக்திசண்டர். கணபதி கோயிலில் இருப்பவர் கணசண்டர். ஸ்கந்தமூர்த்தி கோயிலில் இருக்கும் சண்டர் ஸ்கந்தசண்டர் என அறிக.

12. கோயிலில் வெற்றிலைபாக்குப் போடுதலும், வெற்றிலை பாக்கு எச்சில் துப்புதலும், மூக்குநீர் சிந்துதலும், வீண் வார்த்தை பேசுதலும், நித்திரை செய்தலும் கூடாது.

13. நாடோறும் கோயிலுக்குச் செல்ல இயலாதவர் சோமவாரம், மங்கலவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், மாதப்பிறப்பு, உத்தராயண தட்சிணாயண புண்ணியகாலங்கள், அமாவாசை, பௌர்ணிமை முதலிய விசேட காலங்களில் சென்று அவசியம் தரிசிக்கவேண்டும்.

14. குருக்கள் அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் கொடுக்கும்போது சந்நிதியை மறைத்துக்கொண்டு கொடாமல் பக்கத்தில் வந்திருந்து கீழே சிந்தாமல் சிறிதளவு விபூதியை எடுத்துக் கொடுக்கவேண்டும்.

15. குருக்கள் கொடுக்கும் விபூதியை இரண்டு கைகளாலும் வாங்கிக் கீழே சிந்தாமல் நெற்றியில் இட்டுக்கொள்க. மீதி விபூதியை வாயால் ஊதிவிடலாகாது.

தேவாரத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

நாலடி மேல்வைப்பு : பண் – காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 2

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல் மறவேன்அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றுதென்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணையொன்றினல்
மும்மதில் எரியெழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் அடியலால் ஏத்தாதென் நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலால் அரற்றுதென் நா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மலர் அடியலால் உரையாதென் நாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலால் அரற்றுதென் நாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே. 10

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருப்பட்டீச்சரத்தினின்றும் நீங்கி, திருவாவடுதுறையை அடைந்து, சுவாமி தரிசனம் செய்துகொண்டிருக்கும் நாளிலே, சிவபாத விருதயர் பிள்ளையாரை நோக்கி, 'நான் யாகஞ்செய்தற்குரிய காலம் சமீபித்தது, அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல் வேண்டும்' என்றார். பிள்ளையார் அதைக்கேட்டு, திருக்கோயிலிற் சென்று வணங்கி, "இடரினும் தளரினும்" என்னும் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது சிவபெருமானுடைய திருவருளினாலே, ஒரு சிவபூதம் விரைந்து வந்து, பீடத்தின் மேலே ஆயிரம் பொன் பொருந்திய கிழியொன்று வைத்து, முன்னே நின்று, "இந்தக் கிழி பொன்னுலவாக்கிழி இது சிவபெருமானால் உமக்கு அருளிச் செய்யப்பட்டது" என்று சொல்ல; பிள்ளையார் திருவருளை நினைந்து, நமஸ்கரித்து எழுந்து அஞ்சலி செய்து, பீடத்தின் மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு தந்தையார் கையிற்கொடுத்து, "சிவபெருமானையே தலைவராக நினைந்து வேத விதிப்படி செய்யப்படும் யாகத்தை நீரும் சீர்காழியில் இருக்கின்ற மற்ற அந்தணர்கள் சமஸ்தரும் செய்ய, இக்கிழி குறையாது மிகும்" என்று சொல்லி, சீர்காழிக்குப் போம்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பி, தாம் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்தார்.

இருக்கும் நாளிலே, ஒருநாள் பிள்ளையார் சுவாமி தரிசனம் செய்து, பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்குச் சமீபித்தபோது "இங்கே தமிழ் மணம் கமழ்கின்றது" என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே அங்குள்ளார் அப்பலிபீடத்தை வேருக எழுந்தருளச்செய்தனர். பிள்ளையார் உற்றுநோக்கி, அதனடியிலே சேமித்திருந்த திருமந்திரத் திருமுறையைத் தம்முடைய அருமைத் திருக்கையால் எடுத்து, "இது திருமூலநாயனார் இத்

திருக்கோயிலின் மேலைத் திசையிலேயுள்ள அரசின்கீழே, மூவாயிரம் வருஷமளவு சிவயோகத்திலிருந்து, ஒவ்வொரு வருஷத்திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக 3000 திருப்பாட்டினாலே, சிவபெருமானுடைய திருவுளப் பாங்கின்படி, சிவாகமங்களிலே உணர்த்தப்பட்ட மெய்ப்பொருளை ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கு பாதங்களாகத் தமிழ் நாட்டாருக்கு உபயோகமாகும் பொருட்டுச் செய்தருளினார்'' என்று அத்திருமந்திரத்தின் அருமை பெருமைகளையெல்லாம் சொல்லி, அதனைத் தமிழ்நாடெங்கும் பரவச்செய்தனர்.

திருநாவுக்கரசு நாயனார்

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மாயிரு ஞால மெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 1

மடந்தைபா கத்தர் போலும் மான்மறிக் கையர் போலும்
குடந்தையிற் குழகர் போலும் கொல்புலித் தோலர் போலும்
கடைந்தநஞ் சுண்பர் போலும் காலனைக் காய்வர் போலும்
அடைந்தவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 2

உற்றநோய் தீர்ப்பர் போலும் உறுதுணை யாவர் போலும்
செற்றவர் புரங்கள் மூன்றும் தீயெழச் செறுவர் போலும்
கற்றவர் பரவி யேத்தக் கலந்துலந் தலந்து பாடும்
அற்றவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 3

மழுவமர் கையர் போலும் மாதவள் பாகர் போலும்
எழுநுனை வேலர் போலும் என்புகொண் டணிவர் போலும்
தொழுதெழுந் தாடிப் பாடித் தோத்திரம் பலவுஞ் சொல்லி
அழுமவர்க் கன்பர் போலும் ஆவடு துறைய னாரே. 4

பொடியணி மெய்யர் போலும் பொங்குவெண் ணூலர் போலும்
கடியதோர் விடையர் போலும் காமனைக் காய்வர் போலும்
வெடிபடு தலையர் போலும் வேட்கையாற் பரவுந் தொண்டர்
அடிமையை அளப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 5

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர் கொண்டு போற்றச்
சக்கரம் கொடுப்பர் போலும் தானவர் தலைவர் போலும்
துக்கமா மூடர் தம்மைத் துயரிலே வீழ்ப்பர் போலும்
அக்கரை யார்ப்பர் போலும் ஆவடு துறைய னாரே. 6

விடைதரு கொடியர் போலும் வெண்புரி நூலர் போலும்
படைதரு மழுவர் போலும் பாய்புலித் தோலர் போலும்
உடைதரு கீளர் போலும் உலகமு மாவர் போலும்
அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடு துறைய னாரே. 7

முந்திவா னோர்கள் வந்து முறைமையால் வணங்கி யேத்த
நந்திமா காள ரென்பார் நடுவுடை யார்கள் நிற்பச்
சிந்தியா தேயொ ழிந்தார் திரிபுர மெரிப்பர் போலும்
அந்திவான் மதியஞ் சூடும் ஆவடு துறைய னாரே. 8

பானம ரேனமாகிப் பாரிடந் திட்ட மாலும்
தேனமர்ந் தேறு மல்லித் திசைமுக முடைய கோவும்
தீனரைத் தியக்க றுத்த திருவுரு வுடையர் போலும்
ஆனரை யேற்றர் போலும் ஆவடு துறைய னாரே. 9

பார்த்தனுக் கருள்வர் போலும் படர்சடை முடியர் போலும்
ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள் கொடுப்பர் போலும்
கூத்தராய்ப் பாடி யாடிக் கொடுவலி யரக்கன் தன்னை
ஆர்த்தவா யலறு விப்பார் ஆவடு துறைய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனார், வேதாரணியத்திலே சிலநாள் இருந்து, பின் அதனை நீங்கி, திருநாகைக் காரோணம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக் கொண்டு திருவீழிமிழலையை அடைந்து சிலநாள் அங்கிருந்து, பின் திருவாவடுதுறையிற் சென்று, சுவாமிதரிசனம் செய்து, திருஞானசம்பந்த மூர்த்திநாயனாருக்கு ஒரு திருப்பதிகத்தின் பொருட்டு ஆயிரம் செம்பொன் கொடுத்தருளியதிறத்தை 'மாயிரு ஞால மெல்லாம்' என்னும் திருப்பதிகத்திலே புகழ்ந்துபாடிப் பழையாறையிற் சென்றார்.

திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

மஞ்சனே மணியு மானாய் மரகதத் திரளு மானாய்
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரு நிகழ்வி னானே
துஞ்சும்போ தாக வந்து துணையெனக் காகி நின்று
அஞ்சலென் றருள வேண்டும் ஆவடு துறையு ளானே. 1

நானுகந் துன்னை நாளும் நணுகுமா கருதி யேயும்
ஊனுகந் தோம்பு நாயே னுள்ளுற ஐவர் நின்றார்
தானுகந் தேயு கந்த தகவிலாத் தொண்ட னேனுன்
ஆனுகந் தேறு வானே ஆவடு துறையு ளானே. 2

கட்டமே வினைக ளான காத்திவை நோக்கி யாளாய்
ஒட்டவே யொட்டி நாளும் உன்னையுள் வைக்க மாட்டேன்
பட்டவான் தலைகை யேந்திப் பலிதிரிந் தூர்கள் தோறும்
அட்டமா வுருவி னானே ஆவடு துறையு ளானே. 3

பெருமைநன் றுடைய தில்லை யென்றுநான் பேச மாட்டேன்
ஒருமையா லுன்னை யுள்கி யுகந்துவா னேற மாட்டேன்
கருமையிட் டாய வூனைக் கட்டமே கழிக்கின் றேனுன்
அருமையா நஞ்ச முண்ட ஆவடு துறையு ளானே. 4

துட்டனாய் வினைய தென்னும் சுழித்தலை யகப்பட் டேனைக்
கட்டனா ஐவர் வந்து கலக்காமைக் காத்துக் கொள்வாய்
மட்டவிழ் கோதை தன்னை மகிழ்ந்தொரு பாகம் வைத்து
அட்டமா நாக மாட்டும் ஆவடு துறையு ளானே. 5

காரழல் கண்ட மேயாய் கடிமதிள் புரங்கள் மூன்றும்
ஓரழ லம்பி னாலே யுகைத்துத்தீ யெரிய மூட்டி
நீரழற் சடையு ளானே நினைப்பவர் வினைகள் தீர்ப்பாய்
ஆரழ லேந்தி யாடும் ஆவடு துறையு ளானே. 6

செறிவிலேன் சிந்தை யுள்ளே சிவனடி தெரிய மாட்டேன்
குறியிலேன் குணமொன் றில்லேன் கூறுமா கூற மாட்டேன்
நெறிபடு மதியொன் றில்லேன் நினையுமா நினைய மாட்டேன்
அறிவிலேன் அயர்த்துப் போனேன் ஆவடு துறையு ளானே. 7

கோலமா மங்கை தன்னைக் கொண்டொரு கோல மாய
சீலமே யறிய மாட்டேன் செய்வினை மூடி நின்று
ஞாலமா மிதனு ளென்னை நைவியா வண்ண நல்காய்
ஆலமா நஞ்ச முண்ட ஆவடு துறையு ளானே. 8

நெடியவன் மலரி னானும் நேர்ந்திரு பாலும் நேடக்
கடியதோ ருருவ மாகிக் கனலெரி யாகி நின்ற
வடிவின வண்ண மென்றே யென்றுதாம் பேச லாகார்
அடியனேன் நெஞ்சி னுள்ளார் ஆவடு துறையு ளானே. 9

மலைக்குநே ராய ரக்கன் சென்றுற மங்கை யஞ்சத்
தலைக்குமேற் கைக ளாலே தாங்கினான் வலிமை மாள
உலப்பிலா விரலா லூன்றி ஒறுத்தவற் கருள்கள் செய்து
அலைத்தவான் கங்கை சூடும் ஆவடு துறையு ளானே. 10

திருச்சிற்றம்பலம்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

நிறைக்க வாலியள் அல்லளிந் நேரிழை
மறைக்க வாலியள் அல்லளிம் மாதராள்
பிறைக்க வாலப் பெரும்புன லாவடு
துறைக்க வாலியோ டாடிய சுண்ணமே. 1

தவள மாமதிச் சாயலோர் சந்திரன்
பிளவு சூடிய பிஞ்ஞக னெம்மிறை
அளவு கண்டிலள் ஆவடு தண்டுறைக்
களவு கண்டனள் ஒத்தனள் கன்னியே. 2

பாதிப் பெண்ணொரு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவ னொண்பொருள்
ஆதி யாவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேயென்று சொல்லுமே. 3

கார்க்கொண் மாமுகில் போல்வதோர் கண்டத்தன்
வார்க்கொண் மென்முலை சேர்ந்திறு மாந்திவள்
ஆர்க்கொள் கொன்றையன் ஆவடு தண்டுறைத்
தார்க்கு நின்றிவள் தாழுமா காண்மினே. 4

கருகு கண்டத்தன் காய்கதிர்ச் சோதியன்
பருகு பாலமு தேயெனும் பண்பினன்
அருகு சென்றிலள் ஆவடு தண்டுறை
ஒருவ னென்னை யுடையகோ வென்னுமே. 5

குழலுங் கொன்றையுங் கூவிள மத்தமும்
தழலுந் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழகன் ஆவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைவளை காரிகை யாளுக்கே. 6

பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனைத்
தஞ்ச மென்றிறு மாந்திவ ளாரையும்
அஞ்சுவா ளல்லள் ஆவடு தண்டுறை
மஞ்ச னேடிவள் ஆடிய மையலே. 7

பிறையுஞ் சூடிநற் பெண்ணொடா ணாகிய
நிறையு நெஞ்சமு நீர்மையுங் கொண்டவன்
அறையும் பூம்பொழில் ஆவடு தண்டுறை
இறைவன் என்னை யுடையவன் என்னுமே. 8

வைய ந் தானள ந் தானு மயனுமாய்
மெய்யைக் காணலுற் றார்க்கழ லாயினன்
ஐயன் ஆவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே. 9

பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்
மிக்க வாளரக் கன்பலி வீட்டினன்
அக்க ணிந்தவன் ஆவடு தண்டுறை
நக்க னென்னுமிந் நாணிலி காண்மினே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லா லிருந்தான் தன்னைக்
கற்பகமா யடியார்கட் கருள்செய் வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 1

மின்னானை மின்னிடைச்சே ருருமி னானை
வெண்முகிலா யெழுந்துமழை பொழிவான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பா ரில்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னானை யெந்தை பெருமான் தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 2

பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்ற மாகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்பை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 3

பேணியநற் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
பித்தராம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப் பட்டிங்
கிளைக்கின்றேற் கக்கரைக்கே யேற வாங்கும்
தோணியைத் தொண்டனேன் தூய சோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற் காசின்
ஆணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 4

ஒருமணியை யுலகுக்கோர் உறுதி தன்னை
உதயத்தி னுச்சியை யுருமா னானைப்
பருமணியைப் பாலோடஞ் சாடி னானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பின் இன்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 5

ஏற்றானை எண்டோ ளுடையான் தன்னை
எல்லி நடமாட வல்லான் தன்னைக்
கூற்றானைக் கூற்ற முதைத்தான் தன்னைக்
குரைகடல்வாய் நஞ்சுண்ட கண்டன் தன்னை
நீற்றானை நீளரவொன் றார்த்தான் தன்னை
நீண்ட சடைமுடிமேல் நீரார் கங்கை
ஆற்றானை ஆவடுதண் டுறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 6

கைம்மான மதக்களிற்றை யுரித்தான் தன்னைக்
கடல்வரைவான் ஆகாச மானான் தன்னைச்
செம்மானப் பவளத்தைத் திகழு முத்தைத்
திங்களை ஞாயிற்றைத் தீயா னானை

எம்மானை என்மனமே கோயி லாக
 இருந்தானை என்புருகும் அடியார் தங்கள்
அம்மானை ஆவடுதண் டுறையுள் மேய
 அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 7

மெய்யானைப் பொய்யரொடு விரவா தானை
 வெள்ளடையைத் தண்ணிழலை வெந்தீ யேந்தும்
கையானைக் காமனுடல் வேவக் காய்ந்த
 கண்ணானைக் கண்மூன் றுடையான் தன்னைப்
பையா டரவுமதி யுடனே வைத்த
 சடையானைப் பாய்புலித்தோ லுடையான் தன்னை
ஐயானை ஆவடுதண் டுறையுள் மேய
 அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 8

வேண்டாமை வேண்டுவது மில்லான் தன்னை
 விசயனைமுன் அசைவித்த வேடன் தன்னைத்
தூண்டாமைச் சுடர்விடுநற் சோதி தன்னைச்
 சூலப் படையானைக் காலன் வாழ்நாள்
மாண்டோட வுதைசெய்த மைந்தன் தன்னை
 மண்ணவரும் விண்ணவரும் வணங்கி யேத்தும்
ஆண்டானை ஆவடுதண் டுறையுள் மேய
 அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 9

பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
 பாடலோ டாடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங்கொன்றை மாலை யானைக்
 கோலமா நீல மிடற்றான் தன்னைச்
செந்தமிழோ டாரியனைச் சீரி யானைத்
 திருமார்பில் புரிவெண்ணூல் திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேய
 அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 10

தரித்தானைத் தண்கடல்நஞ் சுண்டான் தன்னைத்
 தக்கன்றன் பெருவேள்வி தகர்த்தான் தன்னைப்
பிரித்தானைப் பிறைதவழ்செஞ் சடையி னானைப்
 பெருவலியான் மலையெடுத்த அரக்கன் தன்னை
நெரித்தானை நேரிழையாள் பாகத் தானை
 நீசனேன் உடலுறுநோ யான தீர
அரித்தானை ஆவடுதண் டுறையுள் மேய
 அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே. 11

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதீ மிக்க
உருவேயென் னுறவேயென் ஊனே ஊனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 1

மாற்றேன் எழுத்தஞ்சும் என்றன் நாவின்
மறவேன் திருவருள்கள் வஞ்ச நெஞ்சின்
ஏற்றேன் பிறதெய்வம் எண்ணு நாயேன்
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
மேற்றான் நீ செய்வனகள் செய்யக் கண்டு
வேதனைக்கே இடங்கொடுத்து நாளும் நாளும்
ஆற்றேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 2

வரையார் மடமங்கை பங்கா கங்கை
மணவாளா வார்சடையாய் நின்றன் நாமம்
உரையா உயிர்போகப் பெறுவே னாகில்
உறுநோய்வந் தெத்தனையும் உற்றா லென்னே
கரையா நினைந்துருகிக் கண்ணீர் மல்கிக்
காதலித்து நின்கழலே ஏத்தும் அன்பர்க்
கரையா அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 3

சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலைவளைவித் துமையவளை யஞ்ச நோக்கிக்
கலித்தாங் கிரும்பிடிமேற் கைவைத் தோடும்
களிறுரித்த கங்காளா எங்கள் கோவே
நிலைத்தார் அவர்தமக்கே பொறையாய் நாளும்
நில்லா உயிரோம்பும் நீதனேன் நான்
அலுத்தேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 4

நறுமா மலர்கொய்து நீரின் மூழ்கி
நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன் தன்னைச்
சூழுலகில் ஊழ்வினைவந் துற்ரு லென்னே
உறவாகி வானவர்கள் முற்றும் வேண்ட
ஒலிதிரை நீர்க் கடல்நஞ்சுண் டுய்யக் கொண்ட
அறவா அடியேனை அஞ்சேல் என்னய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 5

கோன்நா ரணன்அங்கம் தோள்மேற் கொண்டு
கொழுமலரான் தன்சிரத்தைக் கையில் ஏந்திக்
கானர் களிற்றுரிவைப் போர்வை மூடிக்
கங்காள வேடராய் எங்கும் செல்வீர்
நானர் உமக்கோர் வினைக்கே டனேன்
நல்வினையும் தீவினையும் எல்லாம் முன்னே
ஆனய் அடியேனை அஞ்சேல் என்னய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 6

உழையுரித்த மானுரிதோல் ஆடை யானே
உமையவள்தம் பெருமானே இமையோர் ஏறே
கழையிறுத்த கருங்கடல்நஞ் சுண்ட கண்டா
கயிலாய மலையானே உன்பா லன்பர்
பிழைபொறுத்தி யென்பதுவும் பெரியோய் நின்றன்
கடனன்றே பேரருளுன் பால தன்றே
அழையுறுத்து மாமயில்கள் ஆலும் சோலை
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 7

உலந்தார் தலைகலனென் றேந்தி வானேர்
உலகம் பலிதிரிவாய் உன்பால் அன்பு
கலந்தார் மனங்கவரும் காத லானே
கனலாடும் கையவனே ஐயா மெய்யே
மலந்தாங் குயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்தழுந்தி நாளும் நாளும்
அலந்தேன் அடியேனை அஞ்சேல் என்னய்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 8

பல்லார்ந்த வெண்டலை கையி லேந்திப்
பசுவேறி ஊரூரன் பலிகொள் வானே
கல்லார்ந்த மலைமகளும் நீயும் எல்லாம்
கரிகாட்டில் ஆட்டுகந்தீர் கருதீ ராகில்

எல்லாரும் என்தன்னை இகழ்வர் போலும்
    ஏழையமண் குண்டர்சாக் கியர்க ளொன்றுக்
கல்லாதார் திறத்தொழிந்தேன் அஞ்சேல் என்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 9

துறந்தார்தம் தூநெறிக்கண் சென்றே னல்லேன்
    துணைமாலை சூட்டநான் தூயேன் அல்லேன்
பிறந்தேன்நின் திருவருளே பேசின் அல்லால்
    பேசாத நாளெல்லாம் பிறவா நாளே
செறிந்தார் மதில்இலங்கைக் கோமான் தன்னைச்
    செறுவரைக்கீழ் அடர்த்தருளிச் செய்கை எல்லாம்
அறிந்தேன் அடியேனை அஞ்சேல் என்னாய்
    ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. 10

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்திநாயனார்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

மறைய வனொரு மாணிவந் தடைய
    வார மாயவ னாருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலால்
    கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவ னெம்பெரு மானென்றெப் போதும்
    ஏத்தி ஏத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடு மடைந்தேன்
    ஆவ டுதுறை ஆதியெம் மானே. 1

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
    சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாயது தன்னைச்
    சோழ னாக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம்
    போற்றி போற்றியென் றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
    ஆவ டுதுறை யாதியெம் மானே. 2

திகழு மாலவன் ஆயிர மலரால்
ஏத்து வானொரு நீண்மலர் குறையப்
புகழி னாலவன் கண்ணிடந் திடலும்
புரிந்து சக்கரம் கொடுத்தல்கண் டடியேன்
திகழு நின்திருப் பாதங்கள் பரவித்
தேவ தேவநின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சிவந் தடைந்தேன்
ஆவ டுதுறை யாதியெம் மானே. 3

வீரத் தாலொரு வேடுவ னாகி
விசைத்தொர் கேழலைத் துரந்துசென் றணைந்து
போரைத் தான்விச யன்தனக் கன்பாய்ப்
புரிந்து வான்படை கொடுத்தல்கண் டடியேன்
வாரத் தாலுன நாமங்கள் பரவி
வழிபட் டுன்திற மேநினைந் துருகி
ஆர்வத் தோடும்வந் தடியிணை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே. 4

ஒக்க முப்புர மோங்கெரி தூவ
உன்னை உன்னிய மூவர்நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுல காளப்
புகழி னாலருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின்கழ லேதொழு தரற்றி
வேதியா ஆதி மூர்த்திநின் அரையில்
அக்க ணிந்தஎம் மானுனை அடைந்தேன்
ஆவ டுதுறை ஆதியெம் மானே. 5

இந்தத் திருப்பதிகத்தில் 6, 7, 8, 9, 10 இச்செய்யுள்கள் மறைந்துபோயின.

திருச்சிற்றம்பலம்

திரு அரிசிற் கரைப் புத்தூரினின்றும் புறப்பட்டுப் பல திருப்பதிகளை வணங்கித் திருவாவடுதுறையை அடைந்த முனைப்பாடித்தலைவர் திருக்கோயிலை வலமாகவந்து உருகும் அன்புடன் உள்புகுந் தேத்துவார், இப்பதிகத்தை யெடுத்து அதில் கோச்செங்கட் சோழநாயனர் குணங்கொள் பிறப்பும் சிறப்பித்துத் தமிழ்ச் சொன்மாலை சாத்தினர்.

பண் – தக்கேசி

திருச்சிற்றம்பலம்

கங்கை வார்சடை யாய்கண நாதா
 காலகாலனே காமனுக்கனலே
பொங்குமாகடல் விடமிடற்றுனே
 பூதநாதனே புண்ணியாபுனிதா
செங்கண் மால்விடை யாய்தெளிதேனே
 தீர்த்தனே திரு வாவடுதுறையுள்
அங்கணுவெனை அஞ்சலென்றருளாய்
 ஆரெனக்குற வமரர்களேறே. 1

மண்ணின்மேல்மயங் கிக்கிடப்பேனை
 வலியவந்தெனை ஆண்டுகொண்டானே
கண்ணிலேனுடம் பில்லடுநோயால்
 கருத்தழிந்துனக் கேபொறையானேன்
தெண்ணிலாவெறிக் குஞ்சடையானே
 தேவனே திரு வாவடுதுறையுள்
அண்ணலேயெனை அஞ்சலென்றருளாய்
 ஆரெனக்குற வமரர்களேறே. 2

ஒப்பிலாமுலை யாளொருபாகா
 உத்தமாமத்த மார்தருசடையாய்
முப்புரங்களைத் தீவளைத்தங்கே
 மூவருக்கருள் செய்யவல்லானே
செப்ப ஆல்நிழற் கீழிருந்தருளும்
 செல்வனே திரு வாவடுதுறையுள்
அப்பனேயெனை அஞ்சலென்றருளாய்
 ஆரெனக்குற வமரர்களேறே. 3

கொதியினுல்வரு காளிதன்கோபம்
 குறைய ஆடிய கூத்துடையானே
மதியிலேனுடம் பில்லடுநோயால்
 மயங்கினேன்மணி யேமணவாளா
விதியினுலிமை யோர்தொழுதேத்தும்
 விகிர்தனே திரு வாவடுதுறையுள்
அதிபனேயெனை அஞ்சலென்றருளாய்
 ஆரெனக்குற வமரர்களேறே. 4

வந்தவாளரக் கன்வலிதொலைத்து
வாழுநாள்கொடுத் தாய்வழிமுதலே
வெந்தவெண்பொடிப் பூசவல்லானே
வேடனாய்விச யற்கருள்புரிந்த
இந்துசேகர னேஇமையோர்சீர்
ஈசனேதிரு வாவடுதுறையுள்
அந்தணாஎனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே. 5

குறைவிலா நிறை வேகுணக்குன்றே
கூத்தனேகுழைக் காதுடையானே
உறவிலேனுனை யன்றிமற்றடியேன்
ஒருபிழைபொறுத் தாலிழிவுண்டே
சிறைவண்டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனேதிரு வாவடுதுறையுள்
அறவனேயெனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே. 6

வெய்யமாகரி யீருரியானே
வேங்கையாடையி னாய்விதிமுதலே
மெய்யனேயட லாழியன்றரிதான்
வேண்டநீகொடுத் தருள்புரிவிகிர்தா
செய்யமேனிய னேதிகழொளியே
செங்கணாதிரு வாவடுதுறையுள்
ஐயனேயெனை அஞ்சலென்றருளாய்
ஆரென்க்குற வமரர்களேறே. 7

கோதிலாவமு தேயருள்பெருகு
கோலமேயிமை யோர்தொழுகோவே
பாதிமாதொரு கூறுடையானே
பசுபதீபர மாபரமேட்டி
தீதிலாமலை யேதிருவருள்சேர்
சேவகாதிரு வாவடுதுறையுள்
ஆதியேயெனை அஞ்சலென்றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே. 8

வானநாடனே வழித்துணைமருந்தே
மாசிலாமணி யேமறைப்பொருளே
ஏனமாவெயி றாமையுமெலும்பும்
ஈடுதாங்கிய மார்புடையானே

தேன்நெய்பால்தயிர் ஆட்டுகந்தானே
தேவனே திரு வாவடுதுறையுள்
ஆனையேயெனை அஞ்சலென் றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே. 9

வெண்டலைப்பிறை கொன்றையுமரவும்
வேரிமத்தமும் விரவிமுன்முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடையானை
ஈசனைத்திரு வாவடுதுறையுள்
அண்டவாணனைச் சிங்கடியப்பன்
அணுக்கவன்றொண்டன் ஆர்வத்தாலுரைத்த
தண்டமிழ்மலர் பத்தும்வல்லார்கள்
சாதலும்பிறப் பும்மறுப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

திருவரத்துறையைப் பணிந்து பல பதிகள் வழிபட்டுக் காவிரியின் முழுகிக் கடந்து திருவாவடுதுறையை அடைந்த சுந்தரமூர்த்திநாயனார், சுவாமியை வணங்கி, ஒரு கண்ணில்லாமையைக் குறித்து மனங்கவன்று "கங்கைவார் சடையாய்" என்னும் திருப்பதிகம் எடுத்து, ஐந்து திருப்பாட்டுப் பாடி, "குறைவிலா நிறைவே" என்னும் ஆருந்திருப்பாட்டுத் தொடங்கிய அளவில், சிவபெருமான் அவ்வாலயத்தில், திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைத் தரிசிப்பித்தருளினார். அங்ஙனம் தரிசித்த குறிப்புத்தோன்ற அத்திருப்பாட்டில், "சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொனே" என்று அருளிச்செய்தார். அன்றியும், திருப்பாட்டு இறுதி தோறும் "அஞ்சலென் றருளாய் ஆரெனக் குறவு அமரர்கள் ஏறே" என்று வைத்துப் பாடியருளினார்.

சேந்தனுர் திருவிசைப்பா

திருவாவடுதுறை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
மிகுகா விரிக்கரை மேய
ஐயா திருவா வடுதுறை
அமுதேயென் றுன்னே அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்கொன்
றருளா தொழிவது மாதிமையே. 1

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி அமரர் புராணனும்
அணிஆ வடுதுறை நம்பிநின்ற
நீதி அறிகிலள் பொன்னெடுந்
திண்டோள் புணர நினைக்குமே. 2

நினைக்கும் நிரந்தர னேயென்னும்
நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
நயம்பேசும் நன்னுதல் நங்கைமீர்
மனக்கின்ப வெள்ள மலைமகள்
மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
தருணேந்து சேகரன் என்னுமே. 3

தருணேந்து சேகர னேயெனுந்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருணேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வ மல்குபொற் கோயிலுள்
அருணேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே
தெருணேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே. 4

திலக நுதல்உமை நங்கைக்கும்
திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க் கென்னையாட்
கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன் றறிகின்றி லேமெனும்
அணியும்வெண் ணீறஞ் செழுத்தலால்
வலதொன் றிலள்இதற் கென்செய்கேன்
வயல்அந்தண் சாந்தையர் வேந்தனே. 5

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப்புர வித்தேர்ச்
சாந்தை முதல்அயன் சாரதி
கதி அருள் என்னுமித் தையலை
ஆந்தண் திருவா வடுதுறை
யான்செய்கை யார்அறி கிற்பரே. 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்
கெடுத்தோடிக் கெட்ட அத் தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்
என்சொல்லிச் சொல்லும்இத் தூமொழி
கற்போல் மனங்கனி வித்தஎம்
கருணாலயா வந்திடாய் என்றால்
பொற்போ பெருந்திரு வாவடு
துறையாளி பேசா தொழிவதே. 7

ஒழிவொன் றிலாஉண் மைவண் ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
மொழிவொன் றிலாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன் றிலாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன் றிலாவகை யெய்திநின்
றிறுமாக்கும் என்னிள மானனே. 8

மானேர் கலைவளை யுங்கவர்ந்
துளங்கொள்ளை கொள்ள வழக்குண்டே
தேனே அமுதேஎன் சித்தமே
சிவலோக நாயகச் செல்வமே

ஆனே அலம்பு புனற்பொன்னி
    அணிஆ வடுதுறை அன்பர்தம்
கோனே நின் மெய்யடி யார்மனக்
    கருத்தை முடித்திடுங் குன்றமே. 9

குன்றேந்தி கோகன கத்தயன்
    அறியா நெறிஎன்னைக் கூட்டினுய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்ருள்
    இளவல்லி எல்லைக டந்தனள்
அன்றே அலம்பு புனற்பொன்னி
    அணிஆ வடுதுறை யாடினுள்
நன்றே இவள் நம் பரமல்லள்
    நவலோக நாயகன் பாலளே. 10

பாலும் அமுதமும் தேனுமாய்
    ஆனந்தந் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
    புரகால காம புராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்கும்நீர்த்
    திருவா வடுதுறை வேந்தனே(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
    அறிந்தோம் அரிவைபொய் யாததே. 11

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதர் திருப்புகழ்

தத்த தன தான தனத்தனத் தத்த தத்த
தத்த தன தான தனத்தனத் தத்த தத்த
தத்த தன தான தனத்தனத் தத்த தத்த தனதான

சொற் பிழை வராமல் உனேக்கனக் கத்து தித்து
நிற்பதுவராத பவக்கடத் திற்சு ழற்றி
சுக்கிலவதார வழிக்கிணக் கிக்க ளித்து விலைமாதர்

துப்பிறையதான இதழ்க்கனிக்குக் கருத்தை
வைத்துமய லாகி மனத்தை விட்டுக் கடுத்த
துற்சனம காத கரைப்புவிக் குட்டழைத்த நிதிமேவு

கற்பக விராச னெனப்படைக்குப் பெருத்த
அர்ச்சுன ந ராதி யெனக்கவிக் குட்பதித்து
கற்றறிவி ஞவை யெடுத்தடுத் துப்படித்து மிகையாகக்

கத்திடுமெ யாக வலிக்கலிப் பைத்தொலைத்து
கைப்பொருளி லாமை யெனேக்கலக் கப்படுத்து
கற்பனேவி டாமல் அலைத்திருக்கச் சலிக்க விடலாமோ

எற்பணிய ராவை மிதித்துவெட் டித்துவைத்து
பற்றியக ராவை யிழுத்துரக்கக் கிழித்து
எட்கரிப டாமல் இதத்தபுத் திக்கதிக்கு நிலையோதி

எத்தியப சாசின் முகைக்குடத் தைக்குடித்து
முற்றுயிரி லாமல் அடக்கிவிட் டுச்சிரித்த
இற்கணேயி ராமர் சுகித்திருக் கச்சினத்த திறல்வீரா

வெற்பனம தாணி நிறுத்துருக் கிச்சமைத்து
வர்க்கமணி யாக வடித்திருத் தித்தகட்டின்
மெய்க்குலம தாக மலைக்கமுத் தைப்பதித்து வெகுகோடி

விட்கதிர தாக நிகர்த்தொளிக் கச்சிவத்த
ரத்தினப டாக மயிற்பரிக் குத்தரித்து
மிக்கதிரு வாவ டுநற்றுறைக் குட்செழித்த பெருமாளே,

தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன
தான தானன தானன தந்தன தனதான

சோதி மாமதி போல்முக முங்கிளர்
மேரு லாவிய மாமுகை யுங்கொடு
தூர வேவரும் ஆடவர் தங்கள்முன் எதிராயே

சோலி பேசிமுன் ளுளிலி ணங்கிய
மாதர் போலிரு தோளில்வி ழுந்தொரு
சூதி ஞல்வர வேமனை கொண்டவ ரொடுமேவி

மோதி யேகனி வாயத ரந்தரு
நாளி லேபொருள் சூறைகள் கொண்டுபின்
மோன மாயவ மேசில சண்டைக ளுடனேகி

மோச மேதரு தோதக வம்பியர்
மீதி லேமய லாகிம னந்தளர்
மோட ளுகிய பாதக னுங்கதி பெறுவேனே

ஆதி யேயெனும் வானவர் தம்பகை
யான சூரனை மோதிய ரும்பொடி
யாக வேமயி லேறிமு னிந்திடு நெடுவேலா

ஆயர் வாழ்பதி தோறுமு கந்துர
லேறி யேயுறி மீதனை யுங்கள
வாக வேகொடு போதநு கர்ந்தவன் மருகோனே

வாதி ஞல்வரு காளியை வென்றிடு
மாதி நாயகர் வீறுத யங்குகை
வாரி ராசனு மேபணி யுந்திரு நடபாதர்

வாச மாமல ராஞெடு செந்திரு
மார்பில் வீறிய மாயவ னும்பணி
மாசி லாமணி ஈசர்ம கிழ்ந்தருள் பெருமாளே.

109988
Q23:38..21193-K
N72

உ

சிவமயம்

தோத்திரம்

ஒப்பிலாமுலையம்மை

கற்புமிகுங் கருணையினுற் கவுணியர்க்குப்
பால்சுரந்து கயிலை வெற்பைச்
சுப்பிரமாக் கிப்பெருமே ருவைவளைத்துத்
தலைவர்பொருஞ் சூதை வென்று
செப்புநான் மறைக்கடங்காப் பெருவெளியை
வடுப்படுத்தித் திகழ்ந்து வாழும்
ஒப்பிலா முலையுபயத் தாட்கபயங்
கூறிமகிழ்ந் துளத்துள் வைப்பாம்.

8B
4-100